கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - **641 003**

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: **15.07.2025**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மெட்ராஸ் வேளாண் மாணவர்கள் கூட்டமைப்பின் 114 வது நிறுவன தினம்

மெட்ராஸ் வேளாண் மாணவர்கள் கூட்டமைப்பின் 114 வது நிறுவன தினம் 14 ஜூலை, 2025 தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது.

1911 இல் தோற்றுவிக்கப்பட்ட மெட்ராஸ் வேளாண் மாணவர்கள் கூட்டமைப்பு தொடர்ந்து வேளாண் மாணவர்களின் மேம்பாட்டுக்காக செயல்பட்டு வருகிறது. மெட்ராஸ் அக்ரிகல்சுரல் ஜர்னல் என்னும் வேளாண் ஆய்வு குறித்த ஆய்வு கட்டுரைகளைப் பிரசுரிக்கும் அறிவியல் இதழையும் 1913 முதல் இடைவிடாமல் செயல்படுத்தி வருகிறது.

அந்நிறுவனத்தின் 114வது நிறுவன தினம் மிக விமர்சையாக கொண்டாடப்பட்டது. வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பொறுப்பு துணைவேந்தர் முனைவர் இரா.தமிழ்வேந்தன் விழாவிற்கு தலைமை தாங்கினார். கரும்பு இனப்பெருக்க நிறுவன இயக்குநர் முனைவர் கோவிந்தராஜ் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். வேளாண் முதன்மையர் முனைவர் வெங்கடேச பழனிச்சாமி மற்றும் தாவர மூலக்கூறு உயிரியல் மைய இயக்குநர் மற்றும் மெட்ராஸ் வேளாண்மை இதழின் தலைமை ஆசிரியர் முனைவர் செந்தில் நடேசன் விழாவில் பங்கு பெற்றனர்.

பேராசிரியர் முனைவர் ரா.கண்ணன் சிறப்பு விருந்தினரையும் பல்கலைக்கழக மாணவர்களையும் பேராசிரியர்களையும் விழாவிற்கு வரவேற்றார். தலைமை உரை வழங்கிய பொறுப்பு துணைவேந்தர் வேளாண் மாணவர்கள் சங்க கூட்டமைப்பின் செயல்பாடுகளையும் மாணவர்களின் நலனுக்காக இந்நிறுவனத்தின் எதிர்கால திட்டங்களையும் பாராட்டினார். அறிவியல் இதழியலில் மெட்ராஸ் வேளாண்மை மேம்பட மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் தங்கள் பங்களிப்பை அளிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

அவரைத் தொடர்ந்து உரையாற்றிய சிறப்பு விருந்தினர் வேளாண் பல்கலைக்கழகம் தமிழ் சமூகத்திற்கு மட்டுமல்லாது இந்தியாவிற்கு ஆற்றிய அறிவியல் தொண்டையும் 114 ஆண்டுகளாக செயல்பட்டு வரும் மெட்ராஸ் வேளாண் மாணவர்கள் கூட்டமைப்பின் செயல்பாடுகளையும் பாராட்டினார். தனிமனித ஒழுக்கமும் நல்லெண்ணமும் ஒரு சமூகத்தில் மாற்றத்தை நிகழ்த்த முடியும் என அனைவரும் நம்புவதோடு மட்டுமல்லாமல் அதை தினசரி வாழ்வியலிலும் அமல்படுத்த வேண்டும் என மாணவர்களிடம் கேட்டுக் கொண்டார்.

தலைமை ஆசிரியர் வருடாந்திர தலையங்க அறிக்கை மற்றும் பொருளாளர் அறிக்கையை விளக்கினார். செயலாளர் முனைவர்.முருகன் MASU விருதுகள் 2025 மற்றும் MASU தொகுதி கல்லூரிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட பல்வேறு மாணவர் போட்டிகள் குறித்து விளக்கினார். கடந்த இரண்டு ஆண்டுகளில் மெட்ராஸ் வேளாண் இதழின் மைல்கற்கள் மற்றும் MAJ இன் எதிர்கால முயற்சிகள் குறித்து தலைமை ஆசிரியர் விவரித்தார்.

இவ்விழாவில் வேளாண்துறை சார்ந்த ஆய்வில் தனித்தன்மையோடு செயல்பட்டு வரும் பல்துறை சார்ந்த 18 பேராசிரியர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 15 உறுப்புக் கல்லூரிகளிலிருந்தும் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் பிரமுகர்களிடமிருந்து பரிசுகளைப் பெற்றனர். இந்த நிகழ்வில் 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். விழாவின் இறுதியாக பொருளாளர் பேராசிரியர் பாலகிருஷ்ணன் நன்றி உரையாற்றினார்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***